மாயன்
பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

# The Role of Islamic Teachings in Preventing Suicide: A Study based on Emile Durkheim's Suicide Theory

M.M.A. Abdullah[1], A.H. Safiya Safa[2], & M.A. Sumaiya[3], S.M.M. Mazahir[4]

Department of Islamic Studies[1, 4], Department of Arabic Language[2, 3], South Eastern University of Sri Lanka

Manuscript ID : **MT7A0023**

Volume : **2**

Issue : **1**

Month : **March**

Year : **2022**

Received: 05.02.2022

Revised: 10.02.2022

Accepted: 26.03.2022

Published: 31.03.2022

Pages : 39-52

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 4.0 International (CC BY-NC-SA 4.0) International License

OPEN ACCESS

## ABSTRACT:

Emil Durkheim was the pioneer of sociological studies on suicide, which has been considered as a social problem since the Industrial Revolution. Islam which provides guidance to all aspects of life provides various guidelines for successful resolution of the issue. Based on the review of the literature the study aims to analyze Emil Durkheim's suicide theory with the help of basic sources of Islam and find Islamic guidelines to prevent suicide. It was observed that there is a positive correlation between the low rate of suicide among Muslims and Emil Durkheim's conclusion which indicates that the motivating factors in suicide attempts such as the religious beliefs, values, and the degree of individual freedom that religion offers may influence on the suicidal ideation of its followers. The study's major finding reveals that Islamic teachings, which insist on suicide as a major crime, provide proper guidelines to prevent all types of suicides mentioned by Emile Durkheim. This study could be referred for future studies based on prevention of suicide regarding religious beliefs.

## KEYWORDS:

Suicide, Prevention, Social Problem, Emile Durkheim, Islam

## REFERENCES :

1. Ahmad, A.T. (2014, December 25). Zahirat al-Intihar wa Mawqif al-Islam minha. Alukah. https://www.alukah.net/sharia/0/80294 / Ali
2. Ali, A. (2010, June 27). Thatkolai tīrvākumā? [Is suicide the solution?]. http://aliaalifali.blogspot.com/2010/06/blog-post_26.html
3. Al-Khatheeb, Akram. (2009, October 11). Al-Islam wa Zahirat al-Intihar. Assawsana. https://www.assawsana.com/portal/pages.php?newsid=103827
4. Alshahoud, A.N. (2011). Al-Khulasat fi Ahkam al-Intihar. Author.
5. Ibn Baz. (n.d.). Ma Sihat anna kulla Mumin Muslim wa laysa al-Aks. https://binbaz.org.sa/

# தற்கொலையைத் தடுப்பதில் இஸ்லாமியப் போதனைகளின் வகிபங்கு: எமில் துர்கைமின் தற்கொலைக் கோட்பாட்டை மையப்படுத்திய ஆய்வு

மு.ம.அ. அப்துல்லாஹ்[1], அ.ஹ. ஸபிய்யா ஸபா[2],
மு.அ. ஸபிய்யா[3], ஸ.மு.மு. மஸாஹிர்[4],
*இஸ்லாமிய கற்கைகள் துறை[1,4], அரபு மொழித் துறை[2,3], இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*

## கட்டுரைச் சுருக்கம்

கைத்தொழில் புரட்சியின் பின்னர் ஒரு சமூகப் பிரச்சினையாகவே நோக்கப்படும் தற்கொலை தொடர்பான சமூகவியல் ஆய்வுகளை மேற்கொண்டோரின் முன்னோடி எமில் துர்கைம் ஆவார். வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான வழிகாட்டல்களை வழங்கும் இஸ்லாம் இப்பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கான பல்வேறு வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. அந்தவகையில் இஸ்லாமிய மூலாதாரங்களின் துணைகொண்டு எமில் துர்கைமின் தற்கொலைக் கோட்பாட்டைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி தற்கொலையைத் தடுப்பதற்கான இஸ்லாமிய வழிகாட்டல்களைக் கண்டறிவதை இவ்வாய்வு நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வாய்வு முன்னைய இலக்கியங்களின் மீளாய்வை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மத நம்பிக்கைகள், விழுமியங்கள், மதம் வழங்கி இருக்கும் தனிமனித சுதந்திரத்தின் அளவு என்பன மனிதனின் தற்கொலை உணர்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக எமில் துர்கைம் குறிப்பிட்டுள்ளமைக்கும் முஸ்லிம்களிடையே தற்கொலை வீதம் குறைவாகக் காணப்படுகின்றமைக்குமிடையே நேர்மறையான தொடர்பு காணப்படுகின்றது. தற்கொலையை பாரிய குற்றமாகக் கருதும் இஸ்லாமிய போதனைகளில் எமில் துர்கைம் குறிப்பிடும் அனைத்து வகை தற்கொலைகளையும் தடுப்பதற்கான விரிவான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதே இவ்வாய்வின் பிரதான கண்டறிதலாகும். தற்கொலை தொடர்பான சமய வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு இதனை ஒரு வாசிப்பாகக் கொள்ள முடியும்.

## கருச்சொற்கள்

தற்கொலை, தடுத்தல், சமூகப் பிரச்சினை, எமில் துர்கைம், இஸ்லாம்.

## முன்னுரை

இன்றைய உலகை அச்சுறுத்தும் பிரச்சினைகளில் பிரதானமான ஒன்றாக தற்கொலை கருதப்படுகிறது. உலகில் ஒரு வருடத்தில் 800,000 நபர்கள் தற்கொலை மூலம் இறக்கின்றனர். இதன் பாரதூரத்தை கருத்திற் கொண்டு உலக சுகாதார ஸ்தாபனம் உலக தற்கொலை முயற்சி தடுப்பு தினமாக செப்டம்பர் 10ஆம் திகதியை அறிமுகப்படுத்தி, அதனூடாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றது (WHO, 2017).

ஆரம்ப காலங்களில் தற்கொலை ஒரு தனிமனிதப் பிரச்சினையாகவே காணப்பட்டது. எனினும் கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட புதிய கண்டுபிடிப்புக்கள், நகரம் நோக்கிய மக்களின் இடம்பெயர்வு என்பன காரணமாக மனிதனுடைய தேவைகள் அதிகரித்து அடிக்கடி குழப்பங்களுக்கு உள்ளாகியதன் விளைவாக தற்கொலையே தீர்வு என்ற நிலைக்கு அவன் தள்ளப்பட்டான். இதனைத் தொடர்ந்தே தற்கொலை சமூகப் பிரச்சினையாக உருவாகி, சமூகவியலாளர்களின் கருத்தியலைத் தூண்டியது எனலாம் (Farah, 2008).

சமூகப் பிரச்சினையான தற்கொலை பற்றி உளவியல், சமூகவியல், மருத்துவம் போன்ற பல்வேறு துறைசார் அறிஞர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். அந்தவகையில் சமூகவியல் அறிஞரான எமில் தூர்கைம் தற்கொலை பற்றி சமூகவியல் ரீதயாக ஆய்வு செய்த முதலாமவராகக் கொள்ளப்படுகின்றார் (Uyirpu, 2017). பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவரான இவர் தன்னுடைய ஆய்வுகள் மூலம் The Division of Labor in Society (1883), The Rules of Sociological Method (1885), Suicide A Study in Sociology (1897), The Elementary Forms of Religious Life (1912) போன்ற நூல்களை வெளிட்டதனூடாக சமூகவியல் கோட்பாட்டில் சமூகத்தில் தொழிற்பிரிப்பு, சமூக வகைப்பாடு, சமயத்தின் சமூகவியல் மற்றும் தற்கொலை போன்ற பல்வேறுபட்ட எண்ணக்கருக்களை முன்வைத்துள்ளார் (Thanojan, 2019).

இவர் Suicide: A Study in Sociology (1897) எனும் நூலின் ஊடாகத் தற்கொலை சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவுகள், தற்கொலைக்கான காரணங்கள், தற்கொலையின் வகைப்பாடுகள், தற்கொலைக்கும் மதத்திற்கும் இடையிலான தொடர்பு என்பவற்றைக் கண்டறிந்து, தற்கொலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை விளக்கினார். இவ்வாறு தற்கொலை பற்றி இவர் செய்த ஆய்வு, தற்கொலை பற்றிய ஏனைய சமூகவியல் ஆய்வுகளுக்கு அடிப்படையாக அமைந்தது (Uyirpu, 2017).

இஸ்லாம் வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாகும். அதாவது இஸ்லாத்தினுடைய போதனைகள் ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை அவனது வாழ்வின்

அனைத்துக் கோணங்களையும் மையப்படுத்தியதாக விளங்குகிறது. மனித வாழ்க்கைக்கான ஓர் இலக்கை நிர்ணயித்து, அதனை அடைந்து கொள்வதற்கென ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையைத் திட்டமிட்டு அமைத்துக் கொள்ள வேண்டும் எனும் நோக்கத்தில் அனைத்துக் கால சூழ்நிலைகளுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் இஸ்லாம் அமையப்பெற்றுள்ளது (Uyirpu, 2014).

மனிதனை மதித்து மனித வாழ்க்கையை மிகப் பெரும் அருளாக குறிப்பிடும் இஸ்லாம் பிரபஞ்சமும் அதிலுள்ள அனைத்தும் மனிதனுக்காகவே படைக்கப்பட்டிருப்பதாகவும் (அல்குர்ஆன், 2:29) அவற்றை பயன்படுத்தி பூமியை செழிப்புறச் செய்யும் பொறுப்பு மனிதனுக்குரியதாகும் என்றும் வழிகாட்டுகிறது (அல்குர்ஆன், 2:30). அந்த அடிப்படையில் மனிதனையும் அவனது வாழ்வையும் மதிக்கின்ற இஸ்லாத்தின் போதனைகள், அதற்காகவே துறவரத்தையும் தற்கொலையையும் தடுத்துள்ளது. இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆன் மற்றும் முஹம்மத் நபியின் வழிகாட்டல்களில் தற்கொலை பற்றிய விரிவான விளக்கங்களும், தற்கொலையை தவிர்ப்பதற்கும் தடுப்பதற்குமான வழிகாட்டல்களும் காணப்படுகின்றன (Al-Khatheeb, 2009).

உண்மையில் தற்கொலை சமகால சமூகப் பிரச்சினைகளுள் பிரதானமான ஒன்றாகும். இப்பிரச்சினை தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட முதலாமவராக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சமூகவியலாளரான எமில் துர்கைம் அறியப்படுகிறார். சமூகத்தில் நடைபெறும் தற்கொலையின் காரணிகளையும் நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு தற்கொலையை வகைப்படுத்தும் அவர், சமூகத்தில் நிகழும் தற்கொலைகளுக்கான காரணிகளைக் கண்டறிவதையே தனது ஆய்வின் பிரதான இலக்காகக் கொண்டார். மேலைத்தேய அறிஞரான இவர் தனது ஆய்வினை பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளை மையப்படுத்தி மேற்கொண்டதால் அக்காலத்தில் ஐரோப்பாவில் செல்வாக்குச் செலுத்திய புரட்டஸ்தாந்து, கத்தோலிக்க மற்றும் யூத மதங்களை பின்பற்றுவோரை ஆய்வு செய்து, அம்மதங்களின் கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் தனிமனித சுதந்திரத்தில் அவற்றின் ஆதிக்கம் என்பவற்றைப் பொறுத்து தற்கொலையின் விகிதம் மாறுபடுவதைக் கண்டறிந்தார்.

அந்தவகையில் இவ்வாய்வு இவருடைய ஆய்வு முடிவுகளை மையப்படுத்தி உலகில் மிகப்பெரும் செல்வாக்குடைய சமயங்களுள் ஒன்றானதும் ஒப்பீட்டளவில் தற்கொலை விகிதம் குறைவானவர்களைக் கொண்டதுமான இஸ்லாத்தின்

தொகுதி-2 பதிப்பு-1 மார்ச் 2022 | E-ISSN: 2583-0449

போதனைகள், கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் சட்டதிட்டங்களை எமில் துர்கைமின் தற்கொலை பற்றிய ஆய்வு முடிவுகளோடு ஒப்பிட்டு ஆராய முனைகிறது.

## ஆய்வு நோக்கங்கள்

1. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் எமில் துர்கைமின் தற்கொலைக் கோட்பாட்டை பகுப்பாய்வு செய்தல்.
2. தற்கொலையைத் தவிர்ப்பதற்கு இஸ்லாமியப் போதனைகள் கூறும் வழிமுறைகளைத் தெளிவுபடுத்தல்.

## ஆய்வு முறையியல்

இலக்கியயங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்காக சமூகவியல் நூல்கள், எமில் துர்கைமின் கோட்பாடுகள் பற்றிய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையக் கட்டுரைகள் என்பவற்றுடன் இஸ்லாமிய மூல நூல்களான அல்குர்ஆன் மற்றும் அல்ஹதீஸ் என்பனவும் செந்நெறிகால இஸ்லாமிய இலக்கியங்கள் மற்றும் நவீன முஸ்லிம் அறிஞர்களின் எழுத்தாக்கங்கள், ஆய்வுகள் போன்றவற்றில் காணப்படும் தற்கொலை தொடர்பான தகவல்களும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## பறுபேறுகளும் கலந்துரையாடலும்

### 1. தற்கொலைக்கான வரைவிலக்கணம்

எமில் துர்கைமின் தற்கொலை பற்றிய ஆய்வுகள் அதற்கான வரைவிலக்கணத்துடன் ஆரம்பமாகின்றன. “நேர்மறையான அல்லது எதிர்மறையான (pழளவைiஎந ழச நெபயவiஎந) செயற்பாடொன்று தனக்கு முடிவைத் தரும் என நினைத்து தனது உயிரைத் தானே மாய்த்துக்கொள்வதே தற்கொலையாகும்” என அதனை வரையறை செய்யும் அவர், (1897) தனிமனிதன் மற்றும் சமூகத்துக்கிடையிலான தொடர்பை விளக்கி, தற்கொலை பற்றி Suicide: A Study in Sociology (1897)) எனும் ஆய்வு நூலை வெளியிட்டார். நேர்மறையான செயற்பாடு என்பது தடைசெய்யப்பட்ட ஒன்றை செய்வதன் விளைவாகவும், எதிர்மறையான செயற்பாடு என்பது கட்டாயம் செய்ய வேண்டிய ஒன்றை செய்ய முடியுமாக இருந்தும் வேண்டுமென்றே செய்யாமல் இருப்பதன் விளைவாகவும் ஏற்படுவதாகும். துப்பாக்கியினூடாக தன்னைத் தானே சுட்டுக்கொள்ளல், தூக்கில் தொங்குதல் என்பன நேர்மறையான செயற்பாடுகளாகவும், வேண்டுமென்றே உயிர் பிரியும் வரை உண்ணாவிரதமிருத்தல், எரிகின்ற கட்டடத்திலிருந்து வெளியே வர முடியுமாக

இருந்தும் வராமலிருத்தல் என்பன எதிர்மறையான செயற்பாடுகளாகவும் கொள்ள முடியும் (Alshahoud, 2011).

இவ்வாறு தற்கொலை தொடர்பாக தனது வரைவிலக்கணத்தை அவர் முன்வைத்ததைப் போல் இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆன் மற்றும் அஸ்ஹதீஸின் துணைகொண்டு இஸ்லாமிய அறிஞர்களும் தற்கொலைக்கான வரைவிலக்கணங்களை குறிப்பிட்டுள்ளனர். அவற்றுள் சில பின்வருமாறு:

ஏதோ ஒரு வழியினூடாக தனது உயிரைத் தானே மாய்த்துக் கௌ;ளும் செயற்பாடே தற்கொலையாகும் (Ahmad, 2014)

ஒரு மனிதன் தானாகவோ அல்லது பிறருக்கு அனுமதியளிப்பதனூடாகவோ அவனது உயிரைப் போக்கிக் கொள்ளும் செயற்பாடே தற்கொலையாகும் (Alshahoud, 2011)

இவ்வரைவிலக்கணங்கள் இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்களில் இருந்தே பெறப்பட்டுள்ளன என்பதற்கு எடுத்துக்காட்டாக "கழுத்தை நெறித்து உயிரைப் போக்கிக் கொள்பவர் நரகிலும் கழுத்தை நெறித்து தனது உயிரைப் போக்கிக் கொள்வார், கூறிய ஆயுதத்தால் தனது உயிரை மாய்த்துக் கொள்பவர் நரகில் நிரந்தரமாக தனது வயிற்றை கூறிய ஆயுதத்தால் குத்திக்கொள்வார், நஞ்சு குடித்து உயிரை மாய்த்துக்கொள்பவர் நரகிலும் நிரந்தரமாக நஞ்சையே குடிப்பார், மலையிலிருந்து கீழே விழுந்து உயிரை மாய்த்துக் கொள்பவர் நரகிலும் நிரந்தரமாக அவ்வாறே விழுவார்" (புஹாரி, 1365, 5778) எனும் நபிமொழியை குறிப்பிடலாம்.

துர்கைமின் தற்கொலைக்கான வரைவிலக்கணம் இஸ்லாமிய மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட வரைவிலக்கணங்களை ஒத்திருப்பதை எம்மால் அவதானிக்கலாம். ஏனெனில் இஸ்லாமியக் கண்ணோட்டத்தின்படி ஒருவன் தனது உயிரைப் போக்கிக்கொள்வது மாத்திரமல்லாது தனது உயிரைக் கொள்ளும்படி பிறருக்கு அனுமதி அளிப்பதும் தற்கொலையின் ஒரு வடிவமாகவே நோக்கப்படுகின்றது. "நீங்களே உங்களை அழித்துக் கொள்ளாதீர்கள்" (அல்குர்ஆன்: 02:195) எனும் அல்குர்ஆனிய வசனத்தின் படி தனது செயற்பாடுகளினூடாகவோ, மற்றவர்களுக்கு அனுமதி வழங்குவதனூடாகவோ தனது உயிர் பிரிவதற்கு மனிதன் காரணியாக அமையும் போது அவன் தற்கொலை செய்து கொண்டவனாகவே கருதப்படுகிறான் (Thaleema, 2019). எனவே, இஸ்லாமிய நோக்கில் தற்கொலையின் பரப்பு எமில் துர்கைமின் தற்கொலைக்கான வரைவிலக்கணத்தை ஒத்திருப்பதை நாம் அவதானிக்கலாம்.

## 2. மதத்துக்கும் தற்கொலைக்கும் இடையிலான தொடர்பு

எமில் துர்கைம் (1897) மதத்துக்கும் தற்கொலைக்குமிடையிலான தொடர்பை ஆராயும்போது அதிக நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்டுள்ள கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றும் ஸ்பெய்ன், போர்த்துக்கல், இத்தாலி போன்ற நாடுகளிலும் யூதர்களிடமும் தற்கொலை செய்து கொள்வோரின் விகிதம் குறைவாகவும், குறைந்த நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் கொண்டுள்ள புரட்டஸ்தாந்து மதத்தைப் பின்பற்றும் ரூபியா, செக்ஸோனியா, டென்மார்க் போன்ற நாடுகளில் தற்கொலை செய்து கொள்வோரின் விகிதம் அதிகரித்தும் காணப்பட்டதை கண்டறிந்தார். எனவே, அவர் மனிதன் பின்பற்றும் மதத்தில் காணப்படும் நம்பிக்கைகள், விழுமியங்கள் மற்றும் அம்மதம் வழங்கியிருக்கும் தனி மனித சுதந்திரத்தின் அளவு என்பன அவனின் தற்கொலை முனைவில் செல்வாக்குச் செலுத்துகின்றன எனும் முடிவுக்கு வந்தார்.

ஆகவே, மனிதனால் பின்பற்றப்படும் மதமானது தனிமனித சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி, சமய நம்பிக்கைகளையும் நெறிமுறைகளையும் அதிகம் கொண்டமைந்து, விரிவாகவும் ஆழமாகவும் அமையப் பெற்றிருக்கும் போது அம்மதத்தை பின்பற்றுபவர்களிடம் ஏற்படும் ஒற்றுமையும் வலிமையும் அதிகமாகவும் தற்கொலை செய்து கொள்ளும் உணர்வு குறைவாகவும் காணப்படும். அதேபோல் கட்டற்ற தனி மனித சுதந்திரத்தை வழங்கி, குறைவான நம்பிக்கைகளையும் சமயப் பழக்கவழக்கங்களையும் கொண்ட மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கிடையில் ஒற்றுமை குறைவாகவும் தற்கொலை விகிதம் உயர்ந்தும் காணப்படும் என்பதே அவர் குறிப்பிட முனைவதாகும் (Krishnamoorthi, 2000).

அந்த வகையில் இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்று வாழும் முஸ்லிம்களுக்கு மத்தியிலும் ஒப்பீட்டளவில் தற்கொலையின் விகிதம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது (Hasan, 2017). எடுத்துக்காட்டாக தற்கொலைகள் இடம்பெறும் வீதம் தொடர்பில் உலக சுகாதார அமைப்பினால் (WHO) (2016) 183 நாடுகளை மையப்படுத்தி 2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தரவுகளின்படி விகிதாசார அடிப்படையில் கயானா எனும் நாடே அதிக தற்கொலைகள் இடம்பெறும் நாடாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. இங்கு ஒவ்வொரு ஒரு இலட்சம் பேருக்கும் தற்கொலை செய்துகொள்வோரின் வீதம் 30.2 என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இரண்டாவதாக லிஸோதோ (ஒவ்வொரு ஒரு இலட்சம் பேருக்கும் 28.9 பேர்) மூன்றாவது ரஷ்யா (ஒவ்வொரு ஒரு இலட்சம் பேருக்கும் 26.5 பேர்) இடம்பெற்றிருந்தன. இப்பட்டியலில் இந்தியா 19 ஆவது இடத்திலும் (ஒவ்வொரு ஒரு இலட்சம் பேருக்கும் 16.5 பேர்) இலங்கை 31 ஆவது இடத்திலும் (ஒவ்வொரு ஒரு

இலட்சம் பேருக்கும் 14.2 பேர்) ஐக்கிய அமேரிக்கா 34 ஆவது இடத்திலும் (ஒவ்வொரு ஒரு இலட்சம் பேருக்கும் 13.7 பேர்) குறிப்பிடப்பட்டிருந்தன.

எனினும் இத்தரவுகளின்படி ஒப்பீட்டளவில் இஸ்லாமிய நாடுகளில் தற்கொலை வீதம் மிகவும் குறைவாகவே காணப்படுவதை அவதானிக்க முடிந்தது. எடுத்துக்காட்டாக சில முக்கிய இஸ்லாமிய நாடுகளில் தற்கொலை வீதமானது ஒவ்வொரு ஒரு இலட்சம் பேருக்கும் குவைட் 2.2 பேர் (178வது இடம்), சிரியா 2.4 பேர் (176வது இடம்), ஐக்கிய அரபு இராச்சியம் 2.7 பேர் (173வது இடம்), மாலைத்தீவுகள் 2.7 (173வது இடம்), மொரோக்கோ 3.1 பேர் (169வது இடம்), பாகிஸ்தான் 3.1 பேர் (169வது இடம்), லெபனான் 3.2 பேர் (167வது இடம்), தியூனீஸியா 3.2 பேர் (167வது இடம்), அல்ஜீரியா 3.3 பேர் (165 ஆவது இடம்), தஜிகிஸ்தான் 3.3 பேர் (165 ஆவது இடம்), ஸஊதி அரேபியா 3.4 பேர் (166வது இடம்), ஓமான் 3.5 பேர் (162ஆவது இடம்), ஜோர்தான் 3.7 பேர் (159வது இடம்), இந்தோனேசியா 3.7 பேர் (159வது இடம்), ஈரான் 4.0 பேர் (155வது இடம்), ஈராக் 4.1 பேர் (154வது இடம்), எகிப்து 4.4 பேர் (152வது இடம்), கடார் 5.8 பேர் (137வது இடம்), பங்களாதேஷ் 6.1 பேர் (130வது இடம்), மலேசியா 6.2 பேர் (128வது இடம்), ஆப்கானிஸ்தான் 6.4 பேர் (125வது இடம்) ஆகக் காணப்பட்டமையினைக் குறிப்பிட முடியும். இவற்றுள் ஒரு சில நாடுகளைத் தவிர மற்றையவை முஸ்லிமல்லாதவர்களையும் தமது பிரஜைகளாகக் கொண்ட நாடுகளாகும் என்பதும் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

இவ்வாறு இஸ்லாமிய நாடுகளில் தற்கொலை செய்து கொள்வோரின் வீதம் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றமையானது மனிதன் பின்பற்றும் மதத்தில் காணப்படும் நம்பிக்கைகள், விழுமியங்கள் மற்றும் அம்மதம் வழங்கியிருக்கும் தனி மனித சுதந்திரத்தின் அளவு என்பன அவனின் தற்கொலை முனைவில் செல்வாக்குச் செலுத்துகின்றன எனும் அவரது ஆய்வு முடிவை வலுப்படுத்துவதாக அமையப்பெற்றுள்ளது.

பொதுவாக தற்கொலைக்கான ஊக்கிகள் பல காணப்படினும் இஸ்லாமியப் போதனைகளின் படி மனிதனுள் ஏற்படும் ஆன்மீக வறுமையே மிகப் பிரதான ஊக்கியாகும். “அறிந்து கொள்ளுங்கள் உடம்பில் ஒரு சதைப் பிண்டம் உண்டு. அது சீரானால் அனைத்தும் சீராகிவிடும். அது கெட்டு விட்டால் அனைத்தும் கெட்டு விடும். அதுதான் உள்ளம்” (முஸ்லிம், 1599) என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டதனூடாக மனித உடலுக்கான தேவையை விட சற்று அதிகமாக மனித ஆன்மா கவனிக்கப்பட வேண்டியதன் அவசியம் புலப்படுகிறது. மனித ஆன்மாவை முறையாக பராமரிக்கத் தவறுமிடத்து விளைவுகள் மிக அபாயகரமானவையாகவே அமையும் (Faqihuddin, 2014).

அதனடிப்படையில் "உங்களை நீங்களே கொன்று கொள்ள வேண்டாம்" (அல்குர்ஆன், 04:29) என்ற அல்குர்ஆனிய வசனத்தினூடாக தற்கொலையை இஸ்லாம் தடைசெய்திருப்பதுடன் மனித வாழ்க்கையின் நம்பிக்கை, பண்பாடு, ஆன்மீகம், குடும்பம், சமூகம், பொருளாதாரம், அரசியல் என அனைத்துத் துறைகளுக்குமான வழிகாட்டல்களை மிகத் தெளிவாக வழங்கியிருப்பனூடாகவும் இஸ்லாத்தில் நம்பிக்கைகளும், ஒழுக்க மாண்புகளும், சட்டதிட்டங்களும் தனிமனிதனின் கட்டற்ற சுதந்திரத்தை நெறிப்படுத்துவதனூடாகவும் முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒற்றுமையும் வலிமையும் ஏற்பட்டு தற்கொலை செய்து கொள்ளும் உணர்வு குறைவாகக் காணப்படுகிறது.

அதேபோன்று "போதையூட்டும் அனைத்தும் தடை செய்யப்பட்டவையாகும்" (அபூ தாவூத், 3482) என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டமையானது நேரடித் தற்கொலை மாத்திரமன்றி மது மற்றும் ஏனைய போதைப் பொருள் பாவனை போன்ற மறைமுகமான தற்கொலையும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டுள்ளமையை உணர்த்துகிறது.

எனவே, எமில் துர்கைம் குறிப்பிட்ட மதத்துக்கும் தற்கொலைக்குமிடையிலான தொடர்புக்கேற்ப இஸ்லாத்திலும் அனைத்துத் துறைகளுக்குமான பூரண வழிகாட்டல்கள் தெளிவாக வழங்கப்பட்டிருப்பது மற்றும் தனிநபர் வாழ்வில் அது கொண்டிருக்கும் முறையான செல்வாக்கு என்பன முஸ்லிம்களின் மத்தியில் தற்கொலை விகிதம் மிகக் குறைவாகக் காணப்படுவதற்கு முக்கிய காரணமாகும் என்பது புலனாகிறது.

## 3. தற்கொலையின் வகைகள்

எமில் துர்கைம் தனது தற்கொலை தொடர்பான ஆய்வில்; சமூகத்தில் நடைபெறும் தற்கொலைகள் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 04 வகைகளுக்குள் உள்ளடக்கப்பட முடியும் எனக் குறிப்பிடுகிறார் (Ramees, 2018).

சமூக ஒருங்கிணைவு (Social Integration) சீர்குலைந்து, சமூக இடைவினைகள் குறைவதன் விளைவாகத் தோன்றும் தனிநபர் வாதத்தின் (Individualism) பரிணாமமே மனிதனுக்குள் ஏற்படும் தனிமை உணர்வாகும். இவ்வுணர்வு மேலீட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கான தீர்வாக மனிதன் தனது உயிரை மாய்த்துக் கொள்கின்றான். இவ்வகை தற்கொலையை தன்னலம் கருதிய தற்கொலை (Egoistic Suicide) என அவர் (1897) குறிப்பிடுகிறார். இது தொடர்பாக அவர் விபரிக்கும்போது தனிமனிதன், குழு வாழ்க்கையில் போதுமான அளவு பங்குபற்றுதல் இன்மையால் இது விளைகிறது என்கிறார். தனி மனிதன் சமூகத்திலிருந்து விடுபட்டு தன்னைப் பற்றி முழுமையாக

எண்ணும் பொழுது, அவனது விருப்பங்கள் வரம்புகளை மீறும் பொழுது அவன் தன் இருப்புக்குக் காரணம் ஏதும் காண முடியாத நிலையில் இவ்வகைத் தற்கொலைக்கு உந்தப்படுகிறான். எனவே, குழு ஒற்றுமையின்மை, சமூகத் தொடர்பின்மை, கூட்டுப்பிணைப்பில் வழுவின்மை, தற்புகழ்ச்சிக்கும் சுயமரியாதைக்கும் தனிமனிதன் அதிக முக்கியத்துவம் கொடுத்தல் என்பவற்றால் இவ்வகைத் தற்கொலை நிகழ்கிறது (Krishnamoorthi, 2000). தீராத நோய் உள்ளோர், குடும்ப ஆதரவில்லாத முதியோர் மற்றும் அநாதரவாக தனிமையில் இருப்போர் போன்றவர்களே இவ்வகை தற்கொலைக்கு அதிகம் உந்தப்படுபவர்களாவர் (Ramees, 2018). காதல் தோல்வி, குடும்பத் தகராறுகள், எதிர்பார்த்த அடைவுகள் கிடைக்கப் பெறாமை போன்ற காரணிகளுக்காக மேற்கொள்ளப்படும் தற்கொலைகளும் இவ்வகையை சார்ந்தவையாகும் (Ali, 2010).

இது போன்ற நிர்க்கதி நிலைகளின்போது ஒரு முஸ்லிம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென இஸ்லாமிய வழிகாட்டல்கள் அறிவுறுத்துகின்றன. “பொறுமை உடையோராகிய அவர்களுக்குத் துன்பம் ஏற்படும்போது நிச்சயம் நாம் அல்லாஹ்வுக்குரியவர்கள். அவனிடமே திரும்பிச் செல்வோம்” (அல்குர்ஆன் 02:156) எனும் அல்குர்ஆனிய வசனம் ஒரு முஸ்லிமின் சொந்த வாழ்க்கையில் ஏற்படும் எவ்வித நெருக்கடியின் போதும் இறைவன் மீது அவன் கொண்டுள்ள ஆழமான நம்பிக்கையினால் அந்நெருக்கடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, வாழ்வை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்குரிய உந்துதலை அவனுள் உண்டுபண்ணுகிறது.

மனித வாழ்வின் அனைத்து நிகழ்வுகளும் இறைவனின் நாட்டப்படியே நடைபெறுகிறது. எனவே, மனிதனுக்கு எவ்வகையான சோதனைகள் ஏற்படும்போதும் பொறுமைகாத்து, அவற்றை சவாலாக நோக்கி வெற்றிகரமாக முறியடிக்க வேண்டும். “பூமியிலோ, அல்லது உங்களிலோ சம்பவிக்கிற எந்தச் சம்பவமும் - அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (லௌஹ_ல் மஹ்ஃபூள்) ஏட்டில் இல்லாமலில்லை. நிச்சயமாக! அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதேயாகும்” (அல்குர்ஆன், 57:22) எனும் வசனம் மனிதனின் சொந்த நலன்களை பாதிக்கும் வகையில் எவ்வகையான துன்பங்கள் ஏற்படினும் அவற்றுக்கு ஈடுகொடுக்கும் மனவலிமையை அவனுள் உண்டுபண்ணுகின்றது.

அடுத்த வகையாக உச்சகட்ட சமூகப் பிணைப்பினால் தான் சார்ந்திருக்கும் இனம், மதம் அல்லது நாடு என ஏதோ ஒன்றை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் தற்கொலை பற்றி அவர் (1897) குறிப்பிடுகிறார். இவ்வகை தற்கொலையை உயர் நோக்கம் கருதிய தற்கொலை (Altruistic Suicide) எனக் கூறும் அவர், இது தியாகம் மற்றும் ஒரு இலக்கை அடிப்படையாகக் கொண்டமைந்திருக்கும் என்றும் குறிப்பிடுகிறார். பொது நோக்கில் இவ்வகை தற்கொலைகள் நியாயமானவையா எனும் கருத்தியலைத் தாண்டி,

இத்தற்கொலையை மேற்கொள்வோரின் எண்ணப்படி தாம் சார்ந்திருக்கும் சமூகத்தின் நலன் கருதியே இவ்வகைத் தற்கொலையை மேற்கொள்வர் என அவர் விபரிக்கிறார். தமிழீழ விடுதலைப்புலிகளின் தற்கொலைகள் இவ்வகையைச் சார்ந்ததாகும் (Ramees, 2018).

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் குறித்த தற்கொலைச் செயற்பாட்டினூடாக நிலைமை மேலும் மோசமடைந்து, குறித்த சமூகம், நாடு அல்லது பிரதேசம் சீர்குலைந்து அரசியல், பொருளாதார ரீதியாக பாரிய நெருக்கடிகளையும் இழப்புக்களையும் சந்திக்குமிடத்து, இவ்வகை தற்கொலை செயற்பாடுகளை இஸ்லாம் எவ்வகையிலும் அனுமதிக்கவில்லை. "யார் ஒருவர் மற்றவரை அநியாயமாக கொலை செய்கிறாரோ அவர் முழு மனித சமூகத்தையும் கொலை செய்தவர் போலாவார். மேலும் எவரொருவர் மற்றுமொருவரை வாழ வைக்கிறாரோ அவர் முழு மனித சமூகத்தையும் வாழ வைத்தவர் போலாவார் (அல்குர்ஆன், 05:32). ஒரு உயிர் அநியாயமாகக் கொள்ளப்படக் காரணமாக தற்கொலை செயற்பாடு அமையும் போது அது மனிதர் யாவரையும் கொலை செய்வதற்கு ஈடான குற்றமாக இவ்வகைத் தற்கொலையை இஸ்லாம் குறிப்பிடுகிறது. ஒரு சமூகத்தின் தேவைகளும் அபிலாஷைகளும் ஏனைய சமூகத்தவரை பாதிக்காதவாறு அமையப்பெற வேண்டுமென்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும்.

அடுத்ததாக எமில் துர்கைம் (1897) சமூகத்தின் நெறிமுறைகள், சட்டதிட்டங்கள் மற்றும் இயல்புநிலை என்பன எதிர்பாராத விதமாகப் பாதிக்கப்படும்போது அல்லது சீர்குலையும்போது திடீரென ஏற்படும் நிர்க்கதி நிலைக்கு முகங்கொடுக்க முடியாமல் மேற்கொள்ளப்படும் தற்கொலை பற்றிக் குறிப்பிடுகிறார். இவ்வகையை நியமமறு தற்கொலை (Anomic suicide) என அவர் அடையாளப்படுத்துகிறார். இயற்கை அனர்த்தங்கள், யுத்தம், கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட வேலை இழப்புகள், பொருளாதார நெருக்கடி நிலை போன்றன இவ்வகைத் தற்கொலைகள் இடம்பெறுவதற்கான முக்கிய காரணிகளாகும் (Thayani, 2017).

எனினும் இவ்வாறான நிலைகளை வெற்றிகரமாக கையாளுவதற்கான வழிகளை இஸ்லாமிய மூலாதாரங்கள் தெளிவுபடுத்துகின்றன. அந்தவகையில் இவை அனைத்தும் மனிதனை சோதிக்கவென இறைவனால் விதிக்கப்பட்டவையாகும். "நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!" (அல்குர்ஆன், 02:155) எனும் அல்குர்ஆனிய வசனம் மனிதனுக்கு ஏற்படும் அச்சநிலை மற்றும் திடீர் அனர்த்தங்களின்போது ஒரு முஃமினின் (இறை விசுவாசி) உளநிலை பொறுமையுடன்

கூடிய உச்ச இறை நம்பிக்கையுடன் இருக்க வேண்டுமென்று வழியுறுத்துவதனூடாக எவ்வகை நிர்க்கதி நிலைகளின்போதும் அவற்றை எதிர்கொள்வதற்கான மனவலிமையை அவனுக்கு வழங்குகிறது.

அதேபோல் இவ்வாறான நெருக்கடி நிலைகளை ஒழிப்பதற்கான பல்வேறு சமூக-பொருளாதாரத் திட்டங்களையும் இஸ்லாம் அறிமுகப்படுத்தியுள்ளது. எடுத்துக்காட்டாக வசதிபடைத்தோர் ஒவ்வொரு வருடமும் தமது முழுச் சொத்தில் இரண்டரை வீதத்தை ஏழைகள், வறியவர்கள், கடனாளிகள், வழிப் போக்கர்கள் போன்ற பொருளாதாரத் தேவையுடைய எட்டு பிரிவினர்களுக்கு (அல்குர்ஆன், 9:60) வழங்கும் ஸகாத் எனும் கட்டாயக் கடமையை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் தர்மம் (ஸதகா), அன்பளிப்பு (ஹிபா), வாரிசுதாரர் அல்லாதோருக்கு முழுச் சொத்தில் மூன்றில் ஒரு பகுதி வரையான சொத்தை மரண சாசணம் (வஸிய்யா) செய்வதற்கான அனுமதி, தனத சோத்தில் ஒரு பகுதியை இறைவழியில் நிரந்தரமாக செலவிட்டு விடுவதற்கான அனுமதி (வக்ப்) போன்ற பல்வேறு வழிகாட்டல்களும் எவ்வகையான பொருளாதார நெருக்கடிகளையும் நிர்க்கதி நிலைகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான சிறந்த வழிதுறைகளாகும்.

அதேபோல் சமூக மரபுகளுக்குக் கீழ்படிந்து மனிதன் தன்னைத்தானே மாய்த்துக்கொள்ளும் செயற்பாடே துர்கைம் குறிப்பிடும் தலைவிதித் தற்கொலை (Fatalistic Suicide) என்பதாகும். இது தற்கொலையின் வகைகளுள் நான்காவதாகும் (Stack, 2004). தொழில்நுட்ப, அறிவியல் ரீதியாக பாரிய முன்னேற்றங்களைக் கண்டுள்ள நவீன உலகில் இவ்வகை தற்கொலைகள் நிகழாவிடினும் பண்டைய இந்தியாவில் காணப்பட்ட உடன்கட்டை ஏறுதல் எனும் செயற்பாடு இவ்வகைக்கு உதாரணமாக கொள்ளலாம் (Ramees, 2018)

இவ்வகைத் தற்கொலையை இஸ்லாம் எவ்வகையிலும் அனுமதியளிக்கவில்லை. இஸ்லாமிய நோக்கில் இது போன்ற செயற்பாடுகள் மௌட்டீகமானவையாகும். இஸ்லாம், ஜாஹிலிய்யாக் காலத்தில் அரேபியாவில் பரவலாக நிலவிய பெண் சிசுக் கொலையை மிகக் கடுமையாக விமர்சித்திருப்பதனூடாக (அல்குர்ஆன், 81:08) நியாயமற்ற சமூக மரபுகளினூடாக மனித உயிர்கள் காவுகொள்ளப்படும் நிலையை சமூகத்திலிருந்து மாற்ற முனைவது புலனாகிறது.

எமில் துர்கைமினால் குறிப்பிடப்படும் தற்கொலையின் வகைகள் அனைத்தும் ஏதோ ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றவையாகும். மனித வாழ்வு குறித்து அதிக கரிசனை செலுத்தும் இஸ்லாம் தற்கொலையை எவ்வகையிலும் ஆதரிக்காமல் அவர் குறிப்பிட்ட அவ்வனைத்து நிலைமைகளின் போதும் மனிதன்

தனக்கான முடிவாக தற்கொலையை தேர்வு செய்து கொள்வதைத் தவிர்த்து, அவற்றை சவாலாக மாற்றி, வெற்றிகரமாக முறியடிப்பதற்கான அனைத்துவகை ஊக்கிகளையும் தனது மூலாதாரங்களான அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவின் போதனைகள் மூலமாக வழங்குகின்றது.

இதனாலேயே தற்கொலையைத் தடைசெய்தது மாத்திரமன்றி மனித வாழ்க்கை, இன்பங்கள், துன்பங்கள் அல்லது அடைவுகள், இழப்புகள் என இரு பக்கங்களையும் கொண்டமைந்துள்ளது எனும் தத்துவத்தை உள்ளடக்கிய வழிகாட்டல்களை அது வழங்குகிறது. “ஒரு முஃமினின் (இறை விசுவாசியின்) விடயம் ஆச்சரியமளிக்கிறது, அவனுக்கு (எவ்வகை) இன்பம் கிடைத்தபோதிலும் (இறைவனுக்கு) நன்றியுள்ள அடியானாக நடந்து கொள்கிறான். அவனுக்கு (எவ்வகைக்) கெடுதி ஏற்பட்ட போதிலும் (இறைவனுக்காக) பொறுமை காக்கிறான். எனவே, (இன்பம், துன்பம்) என அனைத்து விடயங்களும் அவனுக்கு நலவாகவே அமைந்து விடுகிறது (முஸ்லிம், 2999) எனும் நபி மொழியானது வாழ்க்கையில் வெற்றிகளின்போது எல்லை மீறிய ஆனந்த மேலீட்டால் இறைவனை மறந்து தற்பெருமை கொள்வதை தடைசெய்துள்ளது. அதேபோல் வாழ்வில் எவ்வகையான தோல்விகள் ஏற்படும் போதும் துவண்டு விடாமல் பலமான இறைநம்பிக்கையின் மீது கட்டமைக்கப்பட்ட பொறுமையினூடாக அவற்றை எதிர்கொண்டு, அவற்றை முறியடிக்க வேண்டும் என வழிகாட்டுகிறது. இதற்காகவே அன்றாட துஆக்களையும், மரணம், நோய், தீராத வலி போன்ற வாழ்வின் பல்வேறு நிர்க்கதி நிலைகளின் போதும் தனித்தனியான ஆழ்ந்த அர்த்தங்களைக் கொண்டமைந்த துஆக்களையும் கற்றுத்தருகிறது.

ஆகவே, இஸ்லாத்தின் கொள்கைகள், கோட்பாடுகள், சட்டதிட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அதன் போதனைகள் மிகத் தெளிவாக காணப்படுவதோடு மனித வாழ்க்கைக்கான (ஈருலக வெற்றி எனும்) ஒரு இலக்கை (அல்குர்ஆன், 28:77) நிர்ணயித்து, அதனை அடைந்து கொள்வதற்கென ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையை திட்டமிட்டு அமைத்துக் கொள்ள வேண்டும் எனும் நோக்கில் அனைத்து கால சூழ்நிலைகளுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளன. மனித வாழ்க்கையை மிகப் பெரும் அருளாக குறிப்பிடும் இஸ்லாம் உலகில் உள்ள அனைத்தும் மனிதனுக்காக படைக்கப்பட்டவை (அல்குர்ஆன், 02:29) எனவும் பூமியிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி அதனைச் செழிப்புறச் செய்யும் பொறுப்பு மனிதனுக்குரியதாகும் (அல்குர்ஆன், 02:30) என்றும் வழிகாட்டுகிறது. இவ்வாறு அருளாகக் கிடைக்கப் பெற்றிருக்கும் வாழ்வுக்கான முடிவை மனிதன் தற்கொலையினூடாக தேடிக்கொள்வதை இஸ்லாம் ஆதரிக்கவில்லை என்பதோடு “உங்களை நீங்களே கொலை செய்து கொள்ள வேண்டாம்” (அல்குர்ஆன், 04:29) எனும்

அல்குர்ஆனிய வசனத்தினூடாக இஸ்லாம் தற்கொலையை முற்றாக தடுத்தும் தவிர்த்தும் இருப்பது தெளிவாகிறது.

## முடிவுரை

எனவே, எமில் துர்கைமின் தற்கொலைக்கான வரைவிலக்கனமானது இஸ்லாமிய மூலாதாரங்களின் துணைகொண்டு பெறப்பட்ட வரைவிலக்கணங்களுடன் ஒத்துப்போகிறது. அத்தோடு ஐரோப்பிய நாடுகளை அடிப்படையகக் கொண்டு தற்கொலை தொடர்பான ஆய்வுகளை அவர் மேற்கொண்டிருப்பினும், விரிவான போதனைகளைக் கொண்டுள்ள இஸ்லாத்தைப் பின்பற்றுவோரிடம் தற்கொலை வீதம் குறைவாகக் காணப்படுகின்றமையானது, ஒரு மதத்தின் போதனைகள் மற்றும் அதன் சட்டதிட்டங்கள் மற்றும் தனி மனித சுதந்திரத்தில் அதன் செல்வாக்கின் அளவு என்பன அம்மதத்தைப் பின்பற்றுவோரின் தற்கொலையுணர்வில் தாக்கம் செலுத்தும் என்ற அவரது ஆய்வு முடிவை வலுப்படுத்துகிறது. அத்தோடு இஸ்லாம் தற்கொலையை பாரிய குற்றமாகக் கருதுவதோடு தற்கொலை எனும் சமூகப் பிரச்சினையை வெற்றிகரமாக முறியடிப்பதற்கான பல்வேறு வழிகாட்டல்களை தனது மூலாதாரங்கள் ஊடாக வழங்குகிறது என்பதே இவ்வாய்வின் முடிவாகக் கொள்ளப்பட்டது.

## பரிந்துரைகள்

- சமகாலத்தில் தற்கொலை தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றுக்கான காரணிகளைப் கண்டறிந்து அவற்றை முறியடிப்பதற்கான இஸ்லாமிய வழிகாட்டல்களை முன்வைத்தல்.
- எமில் துர்கைம் போன்ற ஏனைய அறிஞர்களின் தற்கொலைசார் ஆய்வுகளை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்தல்.
- தற்கொலை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதனூடாக எமில் துர்கைமின் தற்கொலை தொடர்பான ஆய்வு முடிவுகளை விமர்சன ரீதியாக ஆராய்தல்.
- தற்கொலை தொடர்பான மதங்களின் வழிகாட்டல்கள் தொடர்பிலான ஒப்பீட்டாய்வுகளை மேற்கொண்டு அவற்றைப் பின்வற்றுவோரின் நடத்தையில் அவை செல்வாக்குச் செலுத்தும் பாங்கினை ஆராய்தல்.

## துணைநூற்பட்டியல்


1. Ahmad, A.T. (2014, December 25). Zahirat al-Intihar wa Mawqif al-Islam minha. Alukah. https://www.alukah.net/sharia/0/80294 / Ali
2. Ali, A. (2010, June 27). Thatkolai tīrvākumā? [Is suicide the solution?]. http://aliaalifali.blogspot.com/2010/06/blog-post_26.html
3. Al-Khatheeb, Akram. (2009, October 11). Al-Islam wa Zahirat al-Intihar. Assawsana. https://www.assawsana.com/portal/pages.php?newsid=103827

4. Alshahoud, A.N. (2011). Al-Khulasat fi Ahkam al-Intihar. Author.
5. Ibn Baz. (n.d.). Ma Sihat anna kulla Mumin Muslim wa laysa al-Aks. https://binbaz.org.sa/
6. Emirbayer, M., & Cohen, Ira. J. (Eds.). (2004). Modernity and Society; Emile Durkheim Sociologist of Modernity. Malden: Blackwell. doi:10.1002/9780470756133
7. Durkheim, Emile. (1897). Sucide A Study in Sociology. New York, USA: The Free Press.
8. Faqihuddin, M. [Nagarvukkana Paathai]. (2014 October 21). Taṟkolai Asiyāviṉ Achariyam [Suicide The surprise of Asia] [Status Update]. Facebook. https://www.facebook.com/Fakeehudeenm/posts/751509514884172/
9. Farah, G. (2008). alantihar zahirat 'iijtimaeiat mutafaqima [Suicide is a growing social phenomenon]. Aljaish, 273-274. https://www.lebarmy.gov.lb/ar/content
10. Hasan, A. (2017). Al-Kullu Mubtalan walakin. London: Markaz al-Braheen.
11. Hutchins, Reid. (2017). Islam and Suicide Terrorism: Separating Fact from Fiction. Counter Terrorist Trends and Analyses, 9(11), 7-11. https://www.jstor.org/stable/26351566
12. Jamahir, B.M. (2010). Meyyiyal piraccikaikaḷum pirayōkaṅkaḷum [Philosophical problems and applications]. Kandy: Nadha
13. Krishnamoorthi, J. (2000). Samūkaviyal Kōṭpāṭukaḷ [Sociological Theories]. Annamalai University.
14. Ramees, A. (2018). Ilaṅkaiyil taṟkolaiyiṉ pōkkum savālkaḷum [The trend of suicide in Sri Lanka and challenges]. Journal of social review, 5(1), 64-75. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4222
15. Shanmugalingam, N. (2002). Tholsīr Samūkaviyal Sintaṉaiyāḷar. University of Jaffna: Sociological Society.
16. Stack, Steven. (2004). Emile Durkheim and Altruistic Suicide. Archives of Suicide Research, 8(1), 9-22. doi: 10.1080/13811110490243741
17. Thaleema, Isnam. (2019 December 6). Al-Muntahir yarhimuh al-Rahmun!. Al Jazeera. https://mubasher.aljazeera.net/
18. Thanojan. (2019, April 9). Samūkaviyal [Sociology]. https://thanojaneastern.blogspot.com/2019/04/blog-post_9.html
19. Thayani. (2017, March 22). Taṟkolaikaḷukku kāraṇam taṉiyaṉā? samūkamā?. Battinews. http://www.battinews.com/2017/03/blog-post_826.html
20. Uyirpu. (2017 Devember 11). Taṟkolai todarpāṉa muṉṉaiya ilakkiyaṅkaḷiṉ mīḷāyvu [Review of previous literature on suicide]. https://www.uyirpu.com/?p=7952
21. World Health Organization. (2016). Suicide rates Data by country. https://apps.who.int/gho/data/node.main?lang=en
22. World Health Organization. (2017, March). Suicide, Fact Sheet. https://www.who.int/health-topics/suicide#tab=tab_1
23. Wray, Matt., Colen, Cynthia., & Pecosolido, Bernice. A. (2011). The Sociology of Suicide. Annual Review of Sociology, 37(1), 505-527. doi: 10.1146/annurev-soc-081309-150058